# பாலர் கல்விப் பாடல்


## கலாநிதி சபா. ஜெயராசா

முதுநிலை விரிவுரையாளர் கல்வியல்துறை

தலைவர்: இராமநாதன் நுண்கலைத்துறை

யாழ் - பல்கலைக்கழகம்



வெளியீடு

நகர்ப்புற அடிப்படைச் சேவைகள்

நிகழ்ச்சித்திட்டம் (யுனிசெவ்)

**மாநகராட்சி மன்றம் - யாழ்ப்பாணம்**


''வளர்ந்தோரின் கடமைகளில் தங்கியுள்ளது

சிறுவரின் உரிமைகள்''

# அணிந்துரை

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைத்துறையின் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா அவர்களினால் ஆக்கம் பெற்ற பாலர் கல்விப் பாடல் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் எமது பிரதேச மக்களினுடைய பல்வேறு மட்டங்களிலான அபிவிருத்திகளிலும் அக்கறை உள்ளவர். ஆரோக்கியமான சிறார்கள் நாட்டினுடைய செல்வங்கள் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர் சிறார்களின் உடல் உளரீதியான வளர்ச்சியின் அவசியத்தை வற்புறுத்துகின்றவர்

இவரால் ஆக்கப்பட்ட பாலர் கல்விப் பாடல்கள் பாலர் துறைக்கு அரிய பங்களிப்பாக விளங்கும் என்பதில் நாம் ஐயம் அடைய தேவையில்லை.

இவ்வரிய பணியை நிறைவேற்றிய கலாநிதி சபா. ஜெயராசா அவர்களை பாராட்டுவதுடன், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் இப்பணிக்காக நிதியை வழங்கியமைக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்

இவ்வெளியீட்டினை வெளிக்கொணர உழைத்த மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களையும், மாநகரசபையினுடைய நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தில் (யுனிசெவ்) திட்ட அலுவலராகப் பணியாற்றும் திரு. அ. யேசுரெத்தினத்தையும் பாராட்டுகின்றேன்.

வே. பொ பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

# பாலர் கல்விப் பாடல்

— கலாநிதி சபா ஜெயராசா —

1. முன்னாரம்பப் பள்ளிக்கூட மாணவரின் உடல் உள்ளம், மன வெழுச்சி, அழகியல் உணர்வு ஆக்கத்திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

2. குழந்தைகளின் மொழியாட்சி, மொழி விருத்தி எண்ணக்கரு விருத்தி மொழித்திறன் என்பவை தொடர்பான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டே பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. குழந்தைகளின் உடலியக்க அசைவுகளையும், மொழி வெளிப்பாடுகளையும் ஒன்றிணைக்கத் தக்கவாறு இங்குள்ள பாலர் கல்விப் பாடல்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

4. ஆய்வு மனபாங்கை விருத்தி செய்தல், சந்த அழகில் ஈடுபடல், கண்டுபிடிக்கும் திறனை வளர்த்தல் முதலியவற்றைத் தூண்டும் வண்ணம் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

5. குழந்தை உளவியல், குழந்தை அழகியல், ஆகிய துறைகளினூடாகவே குழந்தை இலக்கியங்களை வளப்படுத்தவேண்டியுள்ளது.

## 1. பாடுக பாட்டு (அசைவுகளுடன்) பாடல்

பறவைகள் போலக்
கைகள் அசைப்போம்
பாடுக பாட்டு
பாடுக பாட்டு

வலமும் இடமும்
கைகள் அசைப்போம்
பாடுக பாட்டு
பாடுக பாட்டு

மேலும் கீழும்
கைகள் அசைப்போம்
பாடுக பாட்டு
பாடுக பாட்டு

## 2. வளர்க (நடிப்புடன் பாடல்)

புல்லே வளர்க
புல்லே வளர்க
பூமியின் மேலே
புல்லே வளர்க

மரமே வளர்க
மரமே வளர்க
மண்ணின் மேலே
மரமே வளர்க

செடியே வளர்க
செடியே வளர்க
பூக்கள் பூத்துச்
செடியே வளர்க

கொடியே வளர்க
கொடியே வளர்க
குனிந்து நிமிர்ந்து
கொடியே வளர்க.

## 3. ஒட்டுவோம் (செயற்பாடுகளுடன் பாடல்)

வண்ண வண்ணத் துண்டு
வடிவான துண்டு
பூக்கள் போல ஒட்டலாம்
பூனை போல ஒட்டலாம்
சாலை போல ஒட்டலாம்
மான்கள் போல ஒட்டலாம்
கூடை போல ஒட்டலாம்
குருவி போல ஒட்டலாம்
ஆடை போல ஒட்டலாம்
அலங்கரித்து வைக்கலாம்.

4. பூச்சு (சேர்ந்து பாடல்)

இலைகள் இப்போ
பச்சை பூசும்
வானம் இப்போ
நீலம் பூசும்

நெருப்பு இப்போ
சிவப்புப் பூசும்

காகம் இப்போ
கறுப்புப் பூசும்

கொக்கு இப்போ
வெள்ளை பூசும்.

5. வடிவம் (நடிப்புட பாடல்)

வட்டம் வட்டம்
தட்டம் போல
வட்டம் வட்டம்

வளைவு வளைவு
கொழுக்கி போல
வளைவு வளைவு

உருளை உருளை
உரலைப் போல
உருளை உருளை

கோளம் கோளம்
பந்து போலக்
கோளம் கோளம்

## 6. தண்ணீர் (நடிப்புடன்)

கைகள் கழுவத்
தண்ணீர் தண்ணீர்

கால்கள் கழுவத்
தண்ணீர் தண்ணீர்

குடிக்கக் குளிக்கத்
தண்ணீர் தண்ணீர்

ஓடம் செலுத்தத்
தண்ணீர் தண்ணீர்

## 7. சுவை (குழுப்பாடல் பொருள்களுடன்)

பச்சை நிற மாங்காய்
பாதி தின்னப் புளிக்கும்

வெள்ளை நிறத் தேங்காய்
மெல்லத் தின்ன இனிக்கும்

மஞ்சள் நிற வேம்பின்
பிஞ்சுப் பழம் கசக்கும்

வண்ண வண்ண பூவில்வந்து
வந்த தேன் இனிக்கும்.

## 8. பட்டம் ( அசைவுகளுடன் பாடல் )

மெல்ல மெல்லப்
போகும் பட்டம்

மேலே மேலே
போகும் பட்டம்

மாடி மேல
நூலைத் தட்டி

மேலே மேலே
போகும் பட்டம்
கூரை மேலே
நூலைத் தட்டி
மேலே மேலே
போகும் பட்டம்

## 9. பாடுங்கள் (நடிப்புடன் பாடல்)

அம்மா அப்பா
வாருங்கள்,
குத்து விளக்கைத்
தாருங்கள்.

மாமா மாமி
வாருங்கள்
மாலை கட்டித்
தாருங்கள்

அண்ணா அண்ணி
வாருங்கள்
அழகு தமிழ்ப்
பாடுங்கள்.

## 10. மாலை ( அசைவுடன் பாடல் )

காலை நல்ல காலை
கோலம் போடும் காலை

அம்மாவுக்கும் மாலை
அப்பாவுக்கும் மாலை

மாலை நல்ல மாலை
வண்ணப் பூவின் மாலை

ஆசிரியருக்கு மாலை
ஆண்டவருக்கு மாலை

காலை நல்ல காலை
கோலம் போடும் காலை.

## 11. பொம்மை ( செயற்பாடுகளுடன் பாடல் )

எங்கள் பொம்மை
எங்கள் பொம்மை
கண்ணைச் சிமிட்டும்
வண்ணப் பொம்மை

எங்கள் பொம்மை
எங்கள் பொம்மை
கையைச் சுழற்றும்
வண்ணப் பொம்மை

எங்கள் பொம்மை
எங்கள் பொம்மை
காலைப் பிடிக்கும்
வண்ணப் பொம்மை.

## 12. பொம்மை விளையாட்டு
(செயற்பாடுகளுடன் பாடல்)

பூசனிக் காயிலே
பொம்மைகள் செய்வோம்

புளியம் விதையில்
கண்கள் வைப்போம்

புடலங்காயிலே
பொம்மைகள் செய்வோம்

பாம்பு போலச்
சுழல வைப்போம்.

கத்தரிக் காயிலே
பொம்மைகள் செய்வோம்

காதும் மூக்கும்
கண்களும் வைப்போம்.

## 13. உள்ளே என்ன? (செயற்பாகளுடன் பாடல்)

இந்தப் பெட்டியில்
என்ன இருக்கு
அவிழ்த்துப் பார்ப்போம்
அவிழ்த்துப் பார்ப்போம்

இந்த உறையிலே
என்ன இருக்கு
திறந்து பார்ப்போம்
திறந்து பார்ப்போம்

இந்தப் படத்தில்
என்ன இருக்கு
உற்றுப் பார்ப்போம்
உற்றுப் பார்ப்போம்

இந்தப் போர்வையில்
என்ன இருக்கு
எடுத்துப் பார்ப்போம்
எடுத்துப் பார்ப்போம்

## 14. மழை ( நடிப்புடன் பாடல் )

கரிய முகில் வந்தது
கனத்த மழை பெய்தது

மாமரங்கள் நனைந்தன
பூமரங்கள் நனைந்தன

வீதிகளும் நனைந்தன
விளக்குகளும் நனைந்தன
கோபுரங்கள் நனைந்தன
கொட்டில்களும் நனைந்தன
ஆலமரம் நனைந்தது
ஆறு குளம் நிறைந்தது

## 15. பிறந்த நாள் (நடிப்புடன் பாடல்)

நண்பனுக்குப் பிறந்த நாள்
நாங்கள் பாட்டுப் பாடுவோம்
நண்பனுக்குப் பிறந்த நாள்
நல்ல பாட்டுப் பாடுவோம்
நண்பனுக்குப் பிறந்த நாள்
நாங்கள் தாளம் போடுவோம்
நண்பனுக்குப் பிறந்த நாள்
நாங்கள் கூடி ஆடுவோம்
நண்பனுக்குப் பிறந்த நாள்
நல்லவாழ்த்துச் சொல்லுவோம்
வருக வருக நண்பனே
வருக வருக பிறந்த நாள்

# 16. தமிழ் வாழ்த்து

எங்கள் மொழி
தமிழ் மொழி
எழுந்து நின்று
சொல்லுவோம்.

நல்ல நல்ல
பாடல்கள்
உண்டு எங்கள்
மொழியிலே

நல்ல நல்ல
கதைகளும்
உண்டு எங்கள்
மொழியிலே

நல்ல நல்ல
புத்தகம்
உண்டு எங்கள்
மொழியிலே

நல்ல நல்ல
வீரர்கள்
உண்டு எங்கள்
நிலத்திலே

## 17. பறவைகள் ( ஒருவர் பாட மற்றவர் குரல்களை எழுப்புதல் )

ஒருவர் : காகம் பறந்து வருகுது
கத்த இப்போ தொடங்குது

மற்றவர்: கா - கா - கா
கா - கா - கா

ஒருவர் : சேவல் நடந்து வருகுது
கூவ இப்போ தொடங்குது

மற்றவர்: கொக்கரா கோ கொக்கராகோ

ஒருவர்: கோழி இப்போ வருகுது
கூவ இப்போ தொடங்குது

மற்றவர்: கொக் கொக் கொக் கொக்
கொக் கொக் கொக் கொக்

ஒருவர் : குயிலும் இப்போ வருகுது
கூவ இப்போ தொடங்குது

மற்றவர்: கூ கூ கூ கூ
கூ கூ கூ கூ

## 18. மிருகங்கள்

(ஒருவர் பாட மற்றவர் குரல் எழுப்புதல்)

ஒருவர் : குட்டி நாயும் வருகுது
குரைக்க இப்போ தொடங்குது

மற்றவர்: வெவ் வெவ் வெவ வெவ்
வெவ் வெவ் வெவ் வெவ்

ஒருவர் ! ஆட்டுக்குட்டி வருகுது
அசைந்து சத்தம் போடுது

மற்றவர்! — — —
— — —

ஒருவர்; குண்டுப் பசு வருகுது
கத்த இப்போ தொடங்குது

மற்றவர்; — — — —
— — — —

## 19. ஒலி எழுப்புவோம்

( ஒருவர் பாட மற்றவர் குரல் எழுப்புதல் )

ஒருவர்: கோவில் மணி
தூரக் கேட்குது

மற்றவர்: ( மெதுவாக ) டங் டங்
டங் டங்

ஒருவர்: கோவில் மணி
கிட்டக் கேட்குது

மற்றவர்: ( பலமாக ) டங் டங்
டங் டங்

ஒருவர். மேளச் சத்தம்
தூரக் கேட்குது

மற்றவர்: (மெதுவாக)தக்கிட தக்கிட தக்கிட
தக்கிட தக்கிட தக்கிட

ஒருவர்; மேளச் சத்தம்
கிட்டக் கேட்குது

மற்றவர்; ( பலமாக ) தக்கிட தக்கிட தக்கிட
தக்கிட தக்கிட தக்கிட

ஒருவர்; தாளச் சத்தம்
தூரக் கேட்குது

மற்றவர்; கல் கலீர் — கல் — கலீர்
கல் - கலீர் கல் — கலீர்

ஒருவர்; தாளச் சத்தம்
கிட்டக் கேட்குது

மற்றவர்; கல் - கலீர் கல் — கலீர்
கல் - கலீர் கல் — கலீர்

# 20. பூக்கோலம் போடுவோம்

( செயல்களுடன் இணைந்தது )

பூக்கோலம் போடுவோம்
பூவைக் கொண்டு வாருங்கள்

மஞ்சட் பூக்கள் ஒருபுறம்
வெள்ளைப் பூக்கள் ஒருபுறம்
பிரித்து வைப்போம் மேசையில்
பின்னர் கோலம் போடுவோம்

பூக்கோலம் போடுவோம்
பூவைக் கொண்டு வாருங்கள்

நீலப் பூக்கள் ஒருபுறம்
சிவப்புப் பூக்கள் ஒருபுறம்
பிரித்து வைப்போம் மேசையில்
பின்னர் கோலம் போடுவோம்

பூக்கோலம் போடுவோம்
பூவைக்கொண்டு வாருங்கள்

## நடிப்புப் பாடல் ( எல்லோருக்கும் )

உதவுதல் என்ற ஒழுக்கம் பலர் சேர்ந்து நடித்தல்

1. என்னிடத்தில் பாண் உண்டு
எல்லாருக்கும் தருகிறேன்
எல்லாருக்கும் தருகிறேன்

2. என்னிடத்தில் பால் உண்டு
எல்லாருக்கும் தருகிறேன்
எல்லாருக்கும் தருகிறேன்

3. என்னிடத்தில் பழம் உண்டு
எல்லாருக்கும் தருகிறேன்
எல்லாருக்கும் தருகிறேன்

4. என்னிடத்தில் பூ உண்டு
எல்லாருக்கும் தருகிறேன்
எல்லாருக்கும் தருகிறேன்

5. அங்கே ஒரு தாத்தாவாம்
ஆடி ஆடி வருகிறார்
ஆடி ஆடி வருகிறார்

6. பாண் கொடுப்போம் அவருக்கு
பால் கொடுப்போம் அவருக்கு
பழம் கொடுப்போம் அவருக்கு
பூக் கொடுப்போம் அவருக்கு

## நடிப்புப் பாடல் :

(ஒருவர் பனைமரம் போன்று கைகளை அசைத்து நிற்றலும், மற்றவர் பாடுதலும் )

1— பனைமரமே பனைமரமே
குருத்து ஒன்று தருவாயா?

பனைமரம்; குருத்து ஒன்று தருகின்றேன்
குருத்து ஒன்று தருகின்றேன்
என்ன செய்யப் போகின்றீர்?
என்ன செய்யப் போகின்றீர்?

1— அடுக்குப் பெட்டி நான் செய்வேன்
அடுக்குப் பெட்டி நான் செய்வேன்

பனைமரம்; வேறென்ன செய்திடுவீர்?
வேறென்ன செய்திடுவீர்?

2— பாய் செய்வேன் பலவிதமாய்
பாய் செய்வேன் பலவிதமாய்

பனைமரம்; வேறென்ன செய்திடுவீர்?
வேறென்ன செய்திடுவீர்?

3— நீற்றுப் பெட்டி நான் செய்வேன்
நீற்றுப் பெட்டி நான் செய்வேன்

பனைமரம்; வேறென்ன செய்திடுவீர்?
வேறென்ன செய்திடுவீர்?

எல்லோரும்; டங் — டங் டங் — டங்

சேர்ந்து; டிங் — டிங் — டிங் — டிங்
இன்னும் இன்னும் செய்யலாம்
எத்தனையோ செய்யலாம்

# NURSERY RHYMES


**DR SABA JAYARASAH**

*SENIOR LECTURER IN EDUCATION*
*HEAD RAMANATHAN ACADAMY*
*OF FINE ARTS UNIVERSITY OF JAFFNA*



RELEASED BY
URBAN BASIC SERVICES PROGRAMME
(UNICEF)

**Municipal Council - Jaffna**


"CHILDRENS RIGHTS ARE
ADULTS OBLIGATIONS"


கற்பகவிநாயகர் அச்சகம் 295/7 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்